நிகழ்வினை எடுத்திருக்கிறேன். தினம் ஒன்று எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுக்கிறேன், இருங்கள். பதில் வரட்டும், நான் எடுக்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். நான் பதில் வந்தவுடன் எடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

6. கவன ஈர்ப்பு

உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. இரா. அண்ணாதுரை மற்றும் திரு. ஆர். ராமமூர்த்தி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையில் இல்லை. அதற்கெல்லாம் அவையில் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்திரு. துரைமுருகன் புரிந்துகொள்ள வேண்டும். காலையில் 9–45 மணிக்குத்தான் உங்கள் உறுப்பினர் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். நான் பதில் கேட்டு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் அதனை எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு இப்போது கேட்டால் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) 9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு 10–00 மணிக்கு அவையில் எழுப்பினால் நான் என்ன செய்ய முடியும்? எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? நீங்களும் அமைச்சராக, இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி இருக்கும்போது உங்களது கட்சி உறுப்பினரை நீங்கள் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பு

2015 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

வரும்போது நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோருடைய பெயரிலும் கவனம் இருக்கின்றன. எல்லா உறுப்பினர்களும் கொடுத்த கோரிக்கைகளும் என்னுடைய கவனத்தில்தான் இருக்கின்றன. ஆய்வில்தான் இருக்கின்றன. நான் வாய்ப்பு வருகின்றபோது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஆறுமுகம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் recommend *செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்)*

6. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் நீங்கள் சொல்லுங்கள். அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழகத்தில் 62,015 ஹெக்டேர் பரப்பளவில் நீர்த்தேக்கங்கள், 2,65,642 ஹெக்டேர் பரப்பளவில் பெரிய மற்றும் நீண்ட கால நீர்ப்பாசன ஏரிகள், சிறிய மற்றும் குறுகிய கால ஏரிகள் மற்றும் குளங்கள், 56,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள கழிமுகங்கள், சதுப்பு நிலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர்ப் பகுதிகள் உள்ளன.